# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை—600 032.
தொலைபேசி: 044—22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை—600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

அசல் மனு எண்: 047 / 2016
ஆணை எண்: 011 / 2017
நாள்: 12 /01 /2017

திரு. க. கோதண்டபாணி,
துப்புரவுப்பணியாளர்,
ஆயக்குடி பேரூராட்சி,
கதவு எண். 40 A-3, தெற்கு மஞ்சனக்காரர் தெரு,
புது ஆயக்குடி, பழனி தாலுகா,
திண்டுக்கல் மாவட்டம்.

\- முறையீட்டு மனுதாரர்

1. செயல் அலுவலர்,
   நிலக்கோட்டை பேரூராட்சி,
   நிலக்கோட்டை,
   திண்டுக்கல் மாவட்டம்.

2. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
   திண்டுக்கல் மாவட்டம்.

3. செயல் அலுவலர்,
   ஆயக்குடி பேரூராட்சி,
   ஆயக்குடி,
   திண்டுக்கல் மாவட்டம்.

\- எதிர் மனதாரர்கள்

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், புது ஆயக்குடி, தெற்கு மஞ்சனக்காரர் தெரு, கதவு எண். 40 A-3-ல் வசிக்கும் திரு. க. கோதண்டபாணி அவர்களது 21.01.2016 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 27.01.2016 அன்று பெறப்பட்டு, 047/2016 எண்ணிட்ட அசல் மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

<u>ஆணை</u>

திண்டுக்கல் மாவட்டம், ஆயக்குடி பேரூராட்சியைச் சேர்ந்த திரு. க. கோதண்டபாணி என்பவர் மேற்கூறிய முறையீட்டு மனுவில், தான் ஆயக்குடி பேரூராட்சியில் துப்புரவுப் பணியாளராகப் பணியாற்றி வருவதாகவும், அப்பேரூராட்சியில் 14.02.2011 முதல் காலியாக இருந்த பேரூராட்சி துப்புரவுப்பணி மேற்பார்வையாளர் பணி இடத்தில், அப்பதவிக்குத் தகுதியாக இருந்த ஆயக்குடி துப்புரவுப்பணியாளர், திரு. செங்குட்டுவனை பணி நியமனம் செய்யாமல், முறைகேடான வகையில் நிலக்கோட்டை பேரூராட்சி துப்புரவுப் பணியாளர் திரு. மு. சேகர் அவர்கள் ஆயக்குடி பேரூராட்சி துப்புரவுப்பணி மேற்பார்வையாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டார் என்றும், அதற்குப் பின்பு 2014-ல் ஏற்பட்ட காலிப் பணியிடத்திற்கும் பணிமூப்பில் தனக்குப் பின்னால் இருந்த திரு. மகேஷ்வரன் என்பவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவித்துள்ளார். மேலும் ஒவ்வொரு பேரூராட்சியும் தனித்தனி அலகாக உள்ள நிலையில் திரு மு. சேகர் அவர்களுக்குப் பணி உயர்வு வழங்கியதைக் கருத்தில் கொண்டு, அதை ரத்து செய்யக்கோரி இம்முறை மன்ற நடுவத்தில் முறையிட்டுள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக ஆயக்குடி பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை கோரப்பட்டது. செயல் அலுவலர் தனது 3.08.2016 நாளிட்ட, 94/2016 எண்ணுள்ள கடிதத்தில், அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளார். ஆயக்குடி பேரூராட்சியில் துப்புரவுப் பணி மேற்பார்வையாளராகப் பணியாற்றி வந்த திரு. வெங்கடேசன் அவர்கள் 20 சதவிகிதம் ஒதுக்கீட்டின் அடிப்படையில், பாலசமுத்திரம் பேரூராட்சிக்கு இளநிலை உதவியாளராகப் பதவி உயர்வில் சென்றதால், அப்பணியிடம் 14.02.2011 முதல் காலி ஏற்பட்டது என்றும், 2011-ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தேர்தலும், அதை அடுத்து உள்ளாட்சித் தேர்தலும் அறிவிக்கப்பட்டு, தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் இருந்த நிலையில் காலியாக இருந்த துப்புரவுப்பணி மேற்பார்வையாளர் பணியிடத்தினை உடனடியாகப் பூர்த்தி செய்ய இயலவில்லை என்றும், வழிபாட்டுத் தலமான பழனிக்கு அருகில் ஆயக்குடி பேரூராட்சி உள்ளதாலும், பக்தர்கள் அடிக்கடி வருகின்ற பகுதி என்பதாலும் துப்புரவுப்பணியின் அவசர அவசியம் கருதி, திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 19.3.2012 நாளிட்ட செயல் முறைகள் எண் 865/2012/பேரு-2-ல் நிர்வாக நலன் கருதி ஆயக்குடி பேரூராட்சியில் காலியாக இருந்த துப்புரவுப்பணி மேற்பார்வையாளர் பணியிடத்திற்கு பணி மாறுதல் செய்து ஆணையிடப்பட்டது எனத் தெரிவித்துள்ளார். இதனைத் தொடர்ந்து துப்புரவுப் பணி மேற்பார்வையாளர் திரு. ஜெயராமன் அவர்கள் வயது முதிர்வு காரணமாக பணியிலிருந்து 28.02.2014 அன்று ஓய்வு பெற்றார் என்றும் அவர் ஓய்வு பெற்றதால் ஏற்பட்ட காலிப் பணியிடத்தில் தனக்குப் பதவி உயர்வு வழங்கிட வேண்டும் என்று துப்புரவுப் பணியாளர்களின் முதுநிலைப் பட்டியலில் வரிசை எண் 1-ல் இருந்த திரு. ரா. செங்குட்டுவன் கோரியதைத் தொடர்ந்து 30.5.2014 நாளிட்ட ந.க.எண். 35/2014/த.எ-ன் படி திரு. ரா.செங்குட்டுவன் அவர்களுக்கு துப்புரவுப்பணி மேற்பார்வையாளராகப் பதவி உயர்வு வழங்கப்பட்டது என்று செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். ஆயக்குடி பேரூராட்சியில் பணியாற்றும் துப்புரவுப் பணியாளர்களின் முதுநிலைப் பட்டியலில் மனுதாரரின் பெயர் 2-ல் உள்ளது என்றும், துப்புரவுப்பணி மேற்பார்வையாளர் பணியிடம் இப்பேரூராட்சியில் காலியில்லாத நிலையில் அப்பதவியில் அவரை நியமனம் செய்ய இயலவில்லை என்றும் தெரிவித்துள்ளார். வருங்காலத்தில் துப்புரவுப்பணி மேற்பார்வையாளர் பணியிடம் இப்பேரூராட்சியில் காலியேற்படும் நிலையில், முறையீட்டு மனுதாரருக்குத் துப்புரவுப் பணி மேற்பார்வையாளர் பதவி வழங்கக் கோரும் அவரது கோரிக்கை பரிசீலிக்கப்படும் எனவும் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். தேர்தல் நடத்தை விதிகள் பணியாளரை இடமாறுதல் செய்வதைத் தடை செய்யாதா? இது குறித்து செயல் அலுவலர் கடிதத்தில் விளக்கம் இல்லை.

3. இருப்பினும் முறையீட்டு மனுதாரரிடம் விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 15.9.2016 மற்றும் 27.10.2016 நாட்களில் நடைபெறவிருந்த விசாரணைக்கு வருமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டும், மனுதாரர் இம்முறைமன்ற விசாரணைக்கு வரவில்லை. மேலும் முறையீட்டு மனுதாரரின் மேற்படி கோரிக்கை பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களால் பரிசீலிக்கப்பட்டு உரிய விளக்கம் 22.4.2015 நாளிட்ட கடித எண் 741/2015/அ3 மூலம், தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையம் மற்றும் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இந்நேர்வில் மனுதாரரின் கோரிக்கை குறித்து பேரூராட்சி இயக்குநரால் வழங்கப்பட்ட விளக்கம் மற்றும் செயல் அலுவலரின் விளக்க அறிக்கை பரிசீலிக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு, மனுதாரரின் முறையீடு குறித்து மேல் நடவடிக்கை தேவையில்லை எனக் கருதி, அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 12 ஆம் நாள் அன்று என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிடப்பட்டு இவ்வாணையிடப்படுகிறது.

/ஓம்/

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

2/2/2017

செயலாளர்

31.1.17

31/1/17

பெறுநர்

1. திரு. க. கோதண்டபாணி,
   துப்புரவுப்பணியாளர்,
   ஆயக்குடி பேரூராட்சி,
   கதவு எண். 40 A-3, தெற்கு மஞ்சனக்காரர் தெரு,
   விநாயகர் கோவில் அருகில்,
   புது ஆயக்குடி, பழனி தாலுகா,
   திண்டுக்கல் மாவட்டம் - 624 613.

2. செயல் அலுவலர்,
   ஆயக்குடி பேரூராட்சி,
   ஆயக்குடி,
   திண்டுக்கல் மாவட்டம்.